திரு. பொ. காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வலையர் சமூகத்தினர் பெரும்பாலும் மீன் பிடித்தல், வேட்டை ஆடுதல் போன்ற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள ரெவின்யூ கண்மாய்களில் விடப்படும் மீன்பாசி குத்தகைகளை இந்த வலையர் சமூகத்தினருக்கு முன்னுரிமை ...டுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பாசிக் குத்தகையைப் பொறுத்தவரையில், வலையர் சமூகத்தினருக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்கக்கூடிய நிலையில் இந்த அரசு இல்லை. காரணம், இந்தத் தொழிலை நம்பி வாழும் எல்லா மீனவர்களுக்கும், அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகித்தால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அவர்களுக்கு இந்தக் குத்தகை வழங்கும் முன்னுரிமை ஏற்பாட்டை, விதிமுறைகளை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது.

பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகள்.

*வினா எண் 343—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிற்பட்டோர் நல மாணவர் விடுதிகளில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஆம். பிற்பட்டோர் நல மாணவர் விடுதிகளில் 25 விழுக்காடு இடங்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மாணவர்கள் விடுதியில் மாணவர்கள் சேர்க்கப்படும்போது, சில மாணவர்கள் விண்ணப்பம் செய்யாமல் விடுபடுகிறார்கள். அதனால் சில காலியிடங்கள் ஏற்படுகின்றன. இந்த பிற்பட்டோர் நல மாணவர்கள் விடுதியிலே, அரிசன மாணவர்களை இன்டர்வியூ செய்து அவர்களை இந்த விடுதியிலே சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத் துறையிலே, பிற்பட்ட மாணவர்களுக்காக நடத்தப்படும் விடுதிகளிலே, அவர்

1979 மார்ச் 12]

களுக்கு அதிகமான இடங்களை ஒதுக்குவதோடு, தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கும், அதைப்போல் முன்னேறிய சமுதாய மாணவர்களுக்கும் அங்கே இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதைப்போல் அரிசன மாணவர்களுக்காக நடத்தப்படும் அரிசன விடுதிகளிலே பெரும்பாலான இடங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு, பிற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு ஒரு பகுதியும், முன்னேறிய சமுதாய மாணவர்களுக்கு ஒரு பகுதியும் வழங்கப்பட்டு வருகிறது. பின்தங்கிய மாணவர்கள் விடுதியிலே அவர்களுக்கு 65 சத வீதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 25 சத வீதம், முன்னேறிய மாணவர்களுக்கு 10 சத வீதம் கொடுக்கப்படுகிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் நலன் கருதி, அத்தகைய மாணவர்களுக்காக தனியாக ஒரு விடுதி நடத்துவதற்கு இந்த அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார, சமுதாய அடிப்படையிலேதான் முன்னேறிய சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று பிரிவுகளை வகுத்திருக்கிறோம். இப்போது அவர்களுடைய பொருளாதார, சமுதாய வளர்ச்சியை முன்னிட்டும், அவர்களை ஊக்குவிப்பதற்காகவும்தான் இவ்வாறு அமைக்கப்படுகிறதே தவிர, இப்படி ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித்தனியான மாணவர் விடுதிகளை அமைப்பதன் மூலம், மாணவர்கள் மத்தியிலே அப்படிப்பட்ட ஒரு எண்ணம் வளர்வது நல்லதல்ல. ஆகவே, பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர் விடுதிகளிலேகூட, இப்படிப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்கெனவே இருந்து வருகிறது.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார ரீதியாக, பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு சலுகைகள் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டு வரும் இந்தத் திட்டம் நாளடைவில் வருகின்றபோது, சமுதாய ரீதியாக, பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக நன்கு முன்னேறிய சமுதாயம் கூட, ஏற்கெனவே பல அரசியல் காரணங்களுக்காக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அப்பேர்ப்பட்ட முன்னேறிய சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே

இருந்து நீக்கி, உண்மையிலேயே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயங்களை இந்தப் பட்டியலிலே சேர்க்க ஒரு குழுவை அமைத்து, அதாவது 'இன்ஈகுவாலிடிஸ் இன் சொசைடி'யை—நீக்குவதற்கு இந்த அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேறிய சமுதாயங்கள் பட்டியலிலே உள்ள சில சமுதாயங்கள் நாளடைவிலே அவர்களை பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பட்டியலிலே சேர்த்து விடுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். . . .

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொல்வதை அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும். நான் சொன்னது, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் முதலில் பட்டியலிலே சேர்க்கப்பட்டு, இப்போது நாளடைவில் பொருளாதார ரீதியிலும், சமுதாய ரீதியிலும் மிகவும் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற காரணத்தால், அந்தச் சமுதாயங்கள் தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? மிகவும் சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக, சமுதாய ரீதியாக அடிதளத்திலே இருக்கின்ற மக்களுக்கு சலுகைகள் வழங்க ஒரு குழுவை அமைத்து அவர்களுக்கு சமநீதி வழங்க, இதைப் பரிசீலிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–30.]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் எழுப்பிய கேள்வியின் இரண்டாவது பகுதிக்குப் பதில் இந்த அரசு அப்போதைக்கப்போது பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்பது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்கள் சேர்க்கப்படவேண்டுமென்ற கோரிக்கை வைக்கும் போது அரசு தீர்க்கமாகப் பரிசீலனை செய்து ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்தும் அதற்கு புள்ளிவிவரங்கள் சேகரித்து பட்டியலில் சேர்ப்பதற்கு உண்டான ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகும் சில சமுதாய மக்கள் இப்படிப்பட்ட பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கடைசியில் சொன்னது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கொ. சின்னசாமி: பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் பிற்பட்டோர் நல விடுதியில் மிகவும் பிற்பட்ட மாணவர்களைச் சேர்ப்பதில் ஏதாவது சங்கடங்கள் இருக்கின்றனவா?

1979 மார்ச் 12]

மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் மொத்தம் எத்தனை சத விகிதம் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்? குறிப்பிட்ட அளவு ஜனத் தொகையினர் அவ்வாறு இருப்பார்களானால் மிகவும் பிற்பட் டோர்களுக்கு தனிச் சலுகைகள் அளித்து விடுதிகளில் இடம், வேலைவாய்ப்புகள் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மிகவும் பிற் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களுக் கான தனிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தச் சமுதாய மாணவர்கள் பற்பட்ட மாணவர்களுக்காக நடைபெறு கிற விடுதிகளில் தங்கிப் படிக்கும் வாய்ப்புக்கள் அவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்கள் எவ்வளவு ஜனத்தொகை இருக் கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதைப்பற்றிய புள்ளிவிவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

திரு. ப. சந்திரன்: தமிழ்நாடு அரசு நடத்துகிற மாணவர் விடுதிகளை பிற்பட்ட மாணவர் விடுதி, தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி என்று பிரிவுபடுத்தி நடத்துவதன் காரணமாக படிக்கின்ற மாணவர்களுக்கு மத்தியில் அப்படிப்பட்ட எண்ணங்களை வளர்ப் பது நல்லதா ? ஆகவே, அரசு மாணவர் விடுதி என்று போட்டு அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடம் கொடுக் கவும், சலுகைகள் வழங்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லதொரு யோசனையைச் சொல்லி யிருக்கிறார்கள். நிச்சயமாக அதைப்பற்றி அரசு பரிசீலித்து செயல்படுத்த முடிவு எடுக்கும்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: தாழ்த்தப்பட்ட மாணவர் களுக்காக நடத்தப்படுகிற விடுதிகளில் போதுமான எண்ணிக் கையுள்ள மாணவர்கள் சேராதிருந்தால் காலியான ஸ்தானங்களை பின்தங்கிய மாணவர்களுக்கு ஒதுக்க அரசு உத்தேசித்திருக் கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: விதிகளின்படி அரசால் நடத்தப்படுகிற எந்தவிடுதியிலும் அந்தஅந்தச் சமுதாயத் தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டு, விழுக்காடு பிர காரம் ஒதுக்கிய பிறகு காலி இடங்கள் இருக்குமானால் அந்த இடங்களை மற்ற பிற்பட்ட சமுதாய மாணவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யலாம் என்று ஏற்கெனவே அரசு உத்திரவிட்டிருக் கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப் பட்ட சம்பவங்களைப் பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ராமநாதன் : இந்த விடுதியில் சேரவேண்டுமென்று மனுப்போடும் மாணவர்களில் பலர் சேர்க்கப்படாமல் விடப் படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? மனுக்கள் போட்ட அத்தனை மாணவர்களையும் விடுதியில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : விண்ணப்பம் செய்கிற எல்லா மாணவர்களுக்கும் விடுதியில் இடம் கொடுப்பது என்பது முடியாத காரியமாகும். ஒரு விடுதியை ஆரம்பிக்கும் போது விடுதியில் எவ்வளவு மாணவர்களைச் சேர்க்க முடியும் என்று அரசு உத்தரவிட்டு அதற்கான நிதியைத் தருகிறது. இந்நிலையங்களில் சேருவதற்கு விண்ணப்பம் வருகிற நேரத்தில் ஆராயப்பட்டு, நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு போதுமான இடங்களைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலாத்துறை பணியாளர்கள்

* வினா எண். 344—திரு. ரா. மார்க்கபந்து :—மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத் துறையில் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கும் பணியாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத்துறையில் பணியாளர்கள் யாரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சென்னை—பூம்புகார் சுற்றுலாப் பேருந்துகள்

* வினா எண். 345—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விடுமுறை நாட்களில் சென்னையிலிருந்து பூம்புகாருக்கு சுற்றுலா பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?